# மாகாணக் கல்வித்திணைக்களம் - வடக்கு மாகாணம்
# கல்விப் பொதுத்தராதரப்பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை
# மூன்றாம் தவணை – 2025

புவியியல் I, II
Geography I, II

மூன்று மணித்தியாலம்

61 T I

தரம் - 11

சுட்டெண்:…………………………….....

மேலதிக வாசிப்பு நேரம் 10 நிமிடங்கள்

## புவியியல் - *I*

அறிவுறுத்தல்கள் :

- இவ் வினாத்தாள் **40 வினாக்களைக்** கொண்டது.
- ஒவ்வொரு வினாவுக்கும் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைவாக எல்லா வினாக்களுக்கும் **இவ்வினாத்தாளிலேயே விடை** எழுதுக.

**❖ 1 தொடக்கம் 5 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலுமுள்ள வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையை அடைப்புக்குறிக்குள் உள்ளவற்றிலிருந்து தெரிந்தெடுத்து புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

1. வளிமண்டலத்தில் காணப்படும் நீராவி ஒடுங்கலுக்குட்பட்டு ______________________ செயன்முறையினூடாக மீண்டும் புவியை வந்தடைகிறது.
(படிவு வீழ்ச்சி / ஆவியாக்கம் / ஆவியுயிர்ப்பு)
2. மூடியிலிருந்து மையத்தை ______________________ பிரிக்கின்றது.
(கொன்ராட் எல்லை / மொஹோகோவிச் எல்லை / கூற்றன் பேர்க் எல்லை)
3. ஆபிரிக்க கண்ட மேடையில் ______________________ தீவு அமைந்துள்ளது.
(சுமாத்திரா / மடகஸ்கார் / நியூசிலாந்து)
4. உலகில் உயர்வான காரியத்தை உற்பத்தி செய்யும் நாடாக ______________________ விளங்குகின்றது.
(இலங்கை / இந்தியா / சீனா)
5. ஆற்றுப் பள்ளதாக்குகளிலும் அதைச் சுற்றியுள்ள சமவெளிகளிலும் ______________________ மண் காணப்படுகின்றது.
(செங்கபில மண்/ செம்பூரான் மண்/ வண்டல் மண்)

**❖ 6 தொடக்கம் 10 வரையுள்ள கூற்றுக்கள் ஒவ்வொன்றையும் வாசித்து அவை சரியாயின் "ச" ஐயும், பிழையாயின் "பி" ஐயும் சுற்றி வட்டம் வரைக.**

6. இலங்கையில் புத்தளம், அம்பாந்தோட்டை, மன்னார், அம்பேவல, பளை ஆகிய பிரதேசங்களில் காற்று சக்தி நிலையங்கள் செயற்படுகின்றன. ( ச / பி )
7. மனிதன் பிறக்கும் போதே உரித்தாகின்ற அம்சங்களாக தேசியம், சமயம், மொழி காணப்படுகின்றது. ( ச / பி )
8. உலகில் அதிகமான அகழிகள் இந்து சமுத்திரத்திலேயே காணப்படுகின்றன. ( ச / பி )

9. இலங்கையில் பாற்பண்ணை ஆராய்ச்சி நிலையங்களாக அம்பேவல, கனன்வில, வல்பிட்ட ஆகிய இடங்கள் காணப்படுகின்றன. ( ச / பி )

10. அயனக் காலநிலை வலயத்தில் காணப்படும் விசேட காலநிலை அம்சமாக மொன்சூன் விளங்குகிறது. ( ச / பி )

❖ **11 தொடக்கம் 16 வரையான வினாக்களிலுள்ள வெற்றிடங்களுக்குப் பொருத்தமான சொற்களைக் கொண்டு நிரப்புக.**

11. இலங்கையில் ______________________ மாவட்டத்தில் அதிகளவு நெற்பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படுகின்றது.

12. யாழ்ப்பாணகுடா நாட்டிலும், வடமேற்கு கடற்கரையோரங்களிலும் ______________________ பாறை பரந்து காணப்படுகிறது.


13. பௌதிக பண்பாட்டு அம்சங்களை உள்ளடக்கி அமைக்கப்பட்ட படமாக ______________________ காணப்படுகிறது.

14. வடக்கு தெற்காக $30° - 50°$ அகலக்கோட்டிற்கு இடைப்பட்ட பிரதேசத்தில் ______________________ காடுகள் பரம்பிக் காணப்படுகின்றன.

15. ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட ______________________ அபிவிருத்தியை அளவிடப் பயன்பட்டது.

16. இலங்கையில் மைக்ரோ மோட்டர் வாகனம் பொருத்தும் தொழிற்சாலை ______________________ எனும் இடத்தில் அமைந்துள்ளது.

❖ **கீழே தரப்பட்டுள்ள வரைபை பயன்படுத்தி 17 தொடக்கம் 19 வரையுள்ள வினாக்களின் வெற்றிடங்களை நிரப்புக.**




மூலம் : இலங்கையின் மத்திய வங்கி, இலங்கையின் பொருளாதார மற்றும் சமூக புள்ளிவிபரங்கள் - 2018

17. பெரும்போகத்தில் மிகக் குறைந்த நெல் உற்பத்தியை ______________________ வருடம் கொண்டுள்ளது.

18. பெரும்போகம் மற்றும் சிறுபோகங்கள் இரண்டிலும் அதிகளவு நெல்லுற்பத்தி சார்பளவில் ______________________ ஆண்டிலேயே பதிவு செய்யப்பட்டுள்ளது.

19. பெரும்போகம், சிறுபோகம் ஆகிய பருவங்களில் நெல்லுற்பத்தி ____________________ ஆண்டில் பாரிய வேறுபாட்டை காட்டுகிறது.

❖ **20 தொடக்கம் 24 வரையுள்ள வினாக்களில் "அ", "ஆ" என இரண்டு நிரல்கள் தரப்பட்டுள்ளன. "அ" நிரலிலுள்ள தகவல்களின் ஒழுங்கிற்கேற்ப "ஆ" நிரலிலுள்ள தகவல்கள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளமையை காட்டும் சரியான விடைக்குரிய இலக்கத்தை எதிரே உள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

20.

| "அ" கைத்தொழில் உற்பத்தி | "ஆ" பிரதேசம் |
|---|---|
| 1. முகமூடி | A – மொரட்டுவ |
| 2. தளபாடப்பொருட்கள் | B – காலி |
| 3. றேந்தை பின்னுதல் | C – அம்பலாங்கொடை |
| | D – பிலிமத்தலாவ |

(1) ABC (2) CAB (3) BCA (4) CBA (...........)

21.

| "அ" பயிர் | "ஆ" ஏற்றுமதி கிராமம் |
|---|---|
| 1. முந்திரி | A – இராஜாங்கனை |
| 2. வெற்றிலை | B – தம்பதெனியா |
| 3. மிளகாய் | C – குருநாகல் |
| | D – கட்டுகம்பொல |

(1) BDA (2) ADB (3) DAB (4) ACD (...........)

22.

| "அ" பண்பாட்டம்சங்கள் | "ஆ" மெற்றிக் படங்களில் பயன்படுத்தப்படும் நிறங்கள் |
|---|---|
| 1. அதிவேக நெடுஞ்சாலை | A – மஞ்சள் |
| 2. வீட்டுதோட்டம் | B – சிவப்பு |
| 3. பாதுகாக்கப்பட்ட வனஎல்லை | C – கறுப்பு |
| | D – ஊதா |

(1) ABC (2) ACD (3) DCA (4) DAC (...........)

23.

| "அ" கனிய மணல் | "ஆ" பரம்பியுள்ள பிரதேசம் |
|---|---|
| 1. செர்கன் | A – எலகர் |
| 2. சிலிக்கா மணல் | B – மாரவில |
| 3. இல்மனைற் | C – பலாங்கொட |
| | D – புல்மோட்டை |

(1) ABD (2) CBD (3) CDA (4) CBA (...........)

24. "அ" "ஆ"

| எரிமலைகள் | அமைந்துள்ள நாடுகள் |
|---|---|
| 1. விசூவியஸ் | A – ஜப்பான் |
| 2. பினாடுபோ | B – பிலிப்பைன்ஸ் |
| 3. பியூஜியாமா | C – இத்தாலி |
| | D – ஐஸ்லாந்து |

(1) ACB (2) BCA (3) CBA (4) CDA (...........)

❖ **25 தொடக்கம் 40 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் தரப்பட்டுள்ள தெரிவுகளிலிருந்து சரியான அல்லது மிகவும் பொருத்தமான விடையை தெரிவு செய்து அதனைத் குறித்து நிற்கும் இலக்கத்தை எதிரேயுள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

25. கிழக்காசிய கரையோர பகுதிக்கு அப்பாலுள்ள பசுபிக் சமுத்திரப் பகுதியில் தோன்றும் சூறாவளிக் காற்றுக்களுக்கு வழங்கும் விசேட பெயர்?
(1) ஹரிகேன் (2) பாகியஸ் (3) தைபூன் (4) சூறாவளி (............)

26. இலங்கையின் பெருந்தோட்ட உற்பத்திகளில் சிங்க முத்திரையின் கீழ் அறிமுகப்படுத்தி உலகெங்கும் நுகர்வோரின் ஆதரவை பெற்றுக் கொண்ட பயிர்
(1) தேயிலை (2) இறப்பர் (3) தென்னை (4) கோப்பி (............)

27. மனித நாகரிக முன்னேற்றத்திற்கு முக்கிய காரணியாக விளங்கிய உலோகக் கனியம்
(1) அலுமினியம் (2) செம்பு (3) மக்னீசியம் (4) இரும்பு (............)

28. இலங்கையில் வர்த்தக ரீதியில், இறால்கள், நண்டுகள் வளர்க்கப்படும் இடங்கள்
(1) சிலாபம், முந்தல் (2) நீர்கொழும்பு, புத்தளம்
(3) யாழ்ப்பாணம், புத்தளம் (4) அறுகம்குடா, சிலாபம் (............)

29. மழையினாலும் நீர்பாசனத்தினாலும் மண்ணில் ஊடுவடித்து மண் படைகளுள் தேங்கி நிற்கும் நீர்
(1) மேற்பரப்பு நீர் (2) சமுத்திர நீர் (3) தரைக்கீழ் நீர் (4) மயிர்த்துளை நீர்
(............)

30. மகான்துர, கொணவலவில் சேதன உரமத்திய நிலையம் அமைந்துள்ள மாவட்டம்
(1) குருநாகல் (2) அநுராதபுரம் (3) பொலன்னறுவை (4) அம்பாறை (............)

31. பேருவளை, பெந்தோட்டை, ஹிக்கடுவை ஆகிய சுற்றுலா மையங்கள் அமைந்துள்ள சுற்றுலா வலயம்
(1) கிழக்குக்கரையோரம் (2) கொழும்பு நகரம் (3) வடபிரதேசம் (4) தென்கரையோரம்
(............)

32. இலங்கையின் விவசாயத்தில் வர்த்தகம் சார்ந்த நவீன போக்கு பின்வருவனவற்றில் அமைவது
(1) புதிய பொதியிடல் முறைகளை பயன்படுத்தல்.
(2) சேதன உரப்பாவனையை ஊக்குவித்தல்.
(3) புதிய நிலங்களை பயிர்செய்கைக்க பயன்படுத்தல்.
(4) ஓய்வூதிய திட்டத்தை அறிமுகப்படுதல். (............)

33. பூகோளம் வெப்பமடைவதில் செல்வாக்குச் செலுத்தும் மானிடக் காரணி யாது?
(1) சூரியப் புள்ளிகள் (2) இயற்கையான சதுப்பு நிலங்கள்
(3) திண்ம கழிவு வெளியேற்றம் (4) வான்வெளியில் நிகழும் மாற்றங்கள் (............)

34. இலங்கையில் மின்சக்தி பிரச்சினையை தீர்ப்பதற்கு தற்காலத்தில் பின்பற்றக் கூடிய உபாயமாக அமைவது
(1) கனிய எண்ணெயை இறக்குமதி செய்தல்.
(2) சூரியகலங்களை பயன்படுத்தி சக்தி உற்பத்தி செய்தல்.
(3) வெட்டுமரம் மூலம் எரிபொருளை பயன்படுத்தல்.
(4) நீர் மின்சக்தி நிலையங்களை புதிதாக அமைத்தல். (.............)

35. இலங்கையில் உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்வதால் ஏற்படும் சாதகமான விளைவு
(1) வைத்தியசாலையில் பணிக்குழுவினர் அதிகரிதல்.
(2) கல்விக்காக புதிய வழி திறக்கப்படல்.
(3) புதிய கடைத்தொகுதிகள் அமைக்கப்படல்.
(4) நாட்டின் புதிய பிரதேசங்கள் அபிவிருத்திக்காகத் திறக்கப்படும். (.............)

36. பருத்திப்புடவை கைத்தொழிலின் பண்பாக அமைவது
(1) சூழல் நேய உற்பத்தியாக காணப்படுகின்றமை.
(2) பொருத்தும் கைத்தொழிலாக நிர்வகிக்கப்படுகின்றமை.
(3) உற்பத்திக்கான பங்களிப்பு பல்தேசிய கம்பனியை சார்ந்தது.
(4) சந்தை வசதிகள் மட்டுபடுத்தப்பட்டு காணப்படுகின்றமை. (.............)

37. பின்வருவனவற்றுள் இறப்பர் செய்கையுடன் தொடர்பான சரியான கூற்றாக அமைவது
(1) சிறியளவான தோட்டங்களில் பரவிக் காணப்படுகின்றமை.
(2) தெற்கு, தென்கிழக்கு நாடுகளில் அதிகளவு உற்பத்தி செய்யப்படுகின்றமை.
(3) ஊழியச் செறிவு குறைந்த பயிராக காணப்படுகின்றமை.
(4) பாரம்பரிய தொழிநுட்பம் பயன்படுத்தப்படுகின்றமை. (.............)

❖ **$A, B, C$ மற்றும் $D$ ஆகியவற்றில் தரப்பட்டுள்ள ஒன்றுடனொன்று தொடர்புடைய தலைப்புக்களின் சோடிகளை நன்கு அவதானித்து 38 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

$A -$ 1. கல்வி
2. மனிதவளம்

$B -$ 1. காடழிப்பு
2. வளிமாசடைவு

$C -$ 1. சூழல் சமநிலை
2. நிலைபேண் அபிவிருத்தி

$D -$ 1. நிலப்பயன்பாடு
2. மண்ணரிப்பு

38. இரண்டாவதில் ஏற்படும் விருத்திக்கு முதலாவது பொறுப்புக் காணப்படும் என்பதை குறிப்பிடும் தலைப்பு சோடி
(1) $A$ (2) $B$ (3) $C$ (4) $D$ (..................)

39. முதலாவது நிலைத்திருப்பதற்கு இரண்டாவது அவசியம் என்பதை குறிக்கும் தலைப்புச் சோடி கொண்டுள்ள விடை எது?
(1) $A$ (2) $B$ (3) $C$ (4) $D$ (..................)

40. இரண்டாவது முதலாவதினால் ஏற்படும் சாதகமற்ற விளைவு என்பதை காட்டும் தலைப்பு சோடி எது?
(1) $A$ (2) $B$ (3) $C$ (4) $D$ (..................)

($40 \times 1 = 40$ புள்ளிகள்)

புவியியல் *II*

❖ **கவனிக்குக.**

- இவ் வினாத்தாள் *I*, *II* எனும் பகுதிகளைக் கொண்டுள்ளது.
- பகுதி *I* இலுள்ள வினா 1 கட்டாயமானது. அதில் (அ), (ஆ), (இ) ஆகிய மூன்று பிரிவுகளுக்கும் விடை எழுதுதல் வேண்டும்.
- பகுதி *II* இலிருந்து நான்கு வினாக்களுக்கு விடை எழுதுதல் வேண்டும்.
- எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுதல் வேண்டும்.

பகுதி *I*

1\. (அ) உமக்கு தரப்பட்டுள்ள இலங்கையின் 1:50,000 அளவுத்திட்டத்திலமைந்த இட விளக்கப்படத்தின் பகுதியை நன்கு அவதானித்து அதன் அடிப்படையில் பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக. விடைகளை எழுதுவதற்கு உமக்கு வழங்கப்பட்டுள்ள தாளினை பயன்படுத்துக.

- (*i*) தொடக்கம் (*iv*) வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் பொருத்தமான விடையை அடைப்புக் குறிக்குள் தரப்பட்டுள்ளவற்றிலிருந்து தெரிவு செய்து எழுதுக.

(i) Ⓖ–Ⓗ கோட்டினால் காட்டப்படும் பௌதிக அம்சம்
(சுவடு / கணவாய் / மேட்டுநிலம்) (01 புள்ளி)

(ii) Ⓐ எழுத்தினால் காட்டப்படும் அம்சம்
(கழிமுகம் / சேற்றுநிலம் / மியாந்தர் வளைவு) (01 புள்ளி)

(iii) Ⓔ எழுத்தினால் எடுத்துக்காட்டப்படும் தரைத்தோற்ற உறுப்பு
(தனிக்குன்று / மலைத்தொடர் / சுவடு) (01 புள்ளி)

(iv) Ⓑ என்ற சதுரத்தினுள் காணப்படும் வடிகால் பாங்கு
(ஆரை வடிகால் / மரநிகர் வடிகால் / அளியடைப்பு வடிகால்) (01 புள்ளி)

(v) படப்பகுதியின் கிழக்கு எல்லையில் காணப்படும் நிர்வாக எல்லை யாது? (01 புள்ளி)

(vi) படப்பகுதியில் காணப்படும் பெருந்தோட்டப் பயிரினை குறிப்பிடுக. (01 புள்ளி)

(vii) தரப்பட்ட படத்தில் காணப்படும் வீதி வகைகள் இரண்டு தருக. (02 புள்ளிகள்)

- வினா இலக்கம் (*viii*) மற்றும் *ix* ஆகியவற்றுக்கு சரியாயின் **“சரி”** எனவும் பிழையாயின் **“பிழை”** எனவும் எழுதுக.

(viii) தரப்பட்ட படப்பிரதேசத்தில் கூடுதலான பகுதியில் சேனைப் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படுகின்றது. (…………)
(01 புள்ளி)

(ix) படப்பகுதி முழுவதும் பரந்த சமவெளி பிரதேசமாகக் காணப்படுகிறது. (…………)
(01 புள்ளி)


**(விடை எழுதுவதற்கு 11 ஆம் பக்கத்தைப் பயன்படுத்துக.)**

(ஆ) உமக்குத் தரப்பட்டுள்ள உலகப்படத்தினைக் கவனமாக அவதானித்து கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக. விடை எழுதுவதற்காக உலகப்படத்தின் அருகே தரப்பட்டுள்ள நிரல் கூட்டினைப் பயன்படுத்துக.

- $(i)$ தொடக்கம் $(v)$ வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் எதிரே மூன்று ஆங்கில எழுத்துக்கள் தரப்பட்டுள்ளன. சரியான விடையைக் குறிக்கும் எழுத்தைப் படத்திலிருந்து தெரிவு செய்து படத்தின் அருகிலுள்ள நிரலில் ஒவ்வொரு வினா இலக்கத்திற்கும் எதிரேயுள்ள கூட்டினுள் எழுதுக.

(i) ஒக்கொட்ஸ் கடல் – (A) (B) (C)
(ii) அற்லஸ் மலைத்தொடர் – (D) (E) (F)
(iii) பி மேட்டுநிலம் – (G) (H) (I)
(iv) மிசூரி மிசிசிப்பி நதி – (J) (K) (L)
(v) சிட்னி நகரம் – (M) (N) (O)

| | |
|---|---|
| i. | |
| ii. | |
| iii. | |
| iv. | |
| v. | |
| | 5 |




(இ) உமக்கு தரப்பட்ட இலங்கைப் படத்தினை கவனமாக அவதானித்து, கீழே தரப்பட்டள்ள வினாக்களுக்கு விடை தருக. விடை எழுதுவதற்காக இலங்கைப்படத்தின் அருகே தரப்பட்டுள்ள நிரலைப் பயன்படுத்துக.

- $(i)$ தொடக்கம் $(v)$ வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் எதிரே மூன்று ஆங்கில எழுத்துக்கள் தரப்பட்டுள்ளன. சரியான விடையைக் குறிக்கும் எழுத்தைப் படத்திலிருந்து தெரிவு செய்து படத்தின் அருகிலுள்ள நிரலில் ஒவ்வொரு வினா இலக்கத்திற்கும் எதிரேயுள்ள கூட்டினுள் எழுதுக.


(i) நெடுந்தீவு – Ⓐ Ⓑ Ⓒ

(ii) இரத்தினபுரி மாவட்டம் – Ⓟ Ⓠ Ⓡ

(iii) புல்மோட்டை – Ⓧ Ⓨ Ⓩ

(iv) களனி கங்கை – Ⓜ Ⓝ Ⓞ

(v) நுரைச்சோலை – Ⓓ Ⓔ Ⓕ




| | |
|---|---|
| i. | |
| ii. | |
| iii. | |
| iv. | |
| v. | |
| | 5 |

பகுதி *II*


2. (i) புவியின் கட்டமைப்பு மாதிரியில் Ⓑ மற்றும் Ⓒ இனால் காட்டப்பட்டுள்ளவற்றைப் பெயரிடுக.

*(02 புள்ளிகள்)*

(ii) Ⓐ என்ற எழுத்தினால் குறித்துக் காட்டப்பட்டுள்ள படையின் சிறப்புக்கள் மூன்றினை குறிப்பிடுக.

*(03 புள்ளிகள்)*

(iii) உயிர்க் கோளத்தின் நிலைத்திருப்பினை பாதிக்கின்ற மானிட நடவடிக்கைகள் மூன்றினைக் குறிப்பிட்டு ஒன்றினை விளக்குக. *(05 புள்ளிகள்)*




3\. (i) அருகில் தரப்பட்டுள்ள இலங்கைப் படத்தில் *A* மற்றும் *D* இனால் காட்டப்பட்டிருக்கும் மீன்பிடியிடங்களை பெயரிடுக. *(02 புள்ளிகள்)*


(ii) இலங்கையின் மீன்பிடிக் கைத்தொழிலின் முக்கியத்துவங்கள் மூன்றினைக் குறிப்பிடுக. *(03 புள்ளிகள்)*

(iii) (a) இலங்கையின் விவசாயம் தொடர்பான நவீன போக்குகள் இரண்டினை குறிப்பிடுக. *(02 புள்ளிகள்)*

(b) விவசாயத்தினை மேம்படுத்த இலங்கை அரசினால் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள் மூன்றினை குறிப்பிடுக. *(03 புள்ளிகள்)*




4\. (i) இலங்கையில் காரியத்தினை அதிகளவு கொள்வனவு செய்யும் ஆசிய நாடுகள் கீழே தரப்பட்டுள்ள உலகப் புறவுருப்படத்தில் *A* மற்றும் *B* இனால் காட்டப்பட்டுள்ளது அவற்றை முறையே பெயரிடுக. *(02 புள்ளிகள்)*




(ii) காரியத்தினை அகழும் போது ஏற்படுகின்ற மூன்று பிரச்சினைகளை குறிப்பிடுக. *(03 புள்ளிகள்)*

(iii) இலங்கையின் பொருளாதாரத்தில் கைத்தொழில் துறையானது பங்களிப்பு மூன்று துறைகளையும் குறிப்பிட்டு அவற்றை சுருக்கமாக விளக்குக. *(05 புள்ளிகள்)*

5. (i) இலங்கையின் பின்வரும் காலநிலை வலயங்களில் காணப்படும் மண்வகைகள் ஒவ்வொன்று வீதம் தருக.

   $(a)$ ஈரவலயம் $(b)$ உலர்வலயம் (02 புள்ளிகள்)

   (ii) மண்ணை பல்வேறு தேவைகளுக்காக பயன்படுத்தும் போது ஏற்படுகின்ற பிரச்சினைகள் மூன்றினை குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

   (iii) கனியவளங்களை பயன்படுத்தும் போது ஏற்படும் பிரச்சினைகளை இழிவளவாக்கும் வகையில் அவ்வளங்களைப் பாதுகாக்க முன்னெடுக்கக் கூடிய நடவடிக்கைகள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக. (05 புள்ளிகள்)

6. (i) இலங்கையின் குடித்தொகை பரம்பலின் 2024 தரவுகளின் அடிப்படையில்

   $(a)$ அதிக குடித்தொகை கொண்ட மாவட்டத்தையும்.

   $(b)$ குறைந்த குடித்தொகை கொண்ட மாவட்டத்தையும் பெயரிடுக. (02 புள்ளிகள்)

   (ii) இலங்கையின் சனத்தொகையின் சமனற்ற பரம்பல் மீது செல்வாக்கு செலுத்தும் பௌதிகக் காரணிகள் இரண்டினையும், மானிடக் காரணிகள் ஒன்றினையும் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

   (iii) இலங்கையின் சனத்தொகைக் கட்டமைப்புக்கு ஏற்ப இனங்காணக் கூடிய விசேட அம்சங்கள் மூன்றினைக் குறிப்பிட்டு அவற்றில் ஒன்றினை விபரிக்குக. (05 புள்ளிகள்)

7. (i) காலநிலை மாற்றத்திற்குக் காரணமான, மனித நடவடிக்கைகளினால் வளிமண்டலத்தை சென்றடையும் தீங்கு விளைவிக்கும் வாயுக்கள் இரண்டு தருக. (02 புள்ளிகள்)

   (ii) பூகோள வெப்பநிலை அதிகரிப்பதனால் ஏற்படுகின்ற விரும்பத்தகாத விளைவுகள் மூன்றினைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

   (iii) (a) காலநிலை மாற்றம் மானிட செயற்பாடுகளின் மீது ஏற்படுத்தும் தாக்கங்கள் இரண்டினை குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

   (b) சூழல் நேயமிக்க சுற்றாடல் ஒன்றைத் தயார் செய்வதற்கு தேசிய மட்டத்தில் முன்வைக்கப்பட்ட வேலைத்திட்டங்கள் மூன்றினைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

8. (i) பிரதேசத்திற்குப் பிரதேசம் காடுகளின் இயல்புகள் வேறுபடுவதனை தீர்மானிக்கும் காரணிகள் இரண்டினைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

   (ii) கடகக் கோட்டிற்கும், மகரக்கோட்டிற்கும் இடையில் பரந்துள்ள,

   $(a)$ காடுகளின் வகையினை குறிப்பிடுக.

   $(b)$ அக் காடுகள் பரந்துள்ள பிரதேசங்கள் இரண்டினைத் தருக. (03 புள்ளிகள்)

   (iii) இலங்கையின் காடுகள் மற்றும் வனஜீவராசிகளைப் பாதுகாப்பதற்கு முன்னெடுக்கப்பட்டள்ள மூன்று வழிமுறைகளை குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றினை விளக்குக. (05 புள்ளிகள்)

புவியியல் II

Geography II

1. (அ)

| | | பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும் |
|---|---|---|
| (i) | ........................................................................................................ | |
| (ii) | ........................................................................................................ | |
| (iii) | ........................................................................................................ | |
| (iv) | ........................................................................................................ | |
| (v) | ........................................................................................................ | |
| (vi) | ........................................................................................................ | |
| (vii) | ........................................................................................................ | |
| (viii) | ........................................................................................................ | |
| (ix) | ........................................................................................................ | |
| | | 10 |